அ.வ.எண். 17/2018 நாள்: 11.02.2026

வா.சா.1 திரு. ராமலிங்கம்

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) வழக்கு சொத்து எனக்கு பாத்தியப்பட்டது அல்ல என்றால் சரியல்ல எனக்கு பாத்தியப்பட்டது. வழக்கு சொத்தின் சர்வே எண் என்ன என்றால் சர்வே எண்.180/4 ஆகும். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 9–ம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கு தமிழ் படிக்க தெரியும் என்றால் சரிதான். எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் பிரதிவாதிகள் சட்டப்படி வெளியேற்றும் வரை இடையூறு செய்யகூடாது என்று தான் பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு சொத்து அரசுக்கு சொந்தமானது என்று குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். புல எண்.180/4 அரசுக்கு சொந்தமானது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

2) வழக்கு சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்று எதனடிப்படையில் கூறுகிறேன் என்றால் 1968–முதல் எனது அனுபவத்தில் இருந்து வருகிறது. வழக்கு சொத்து என்பது எத்தனை குழி என்றால் 33 குழி ஆகும். அது காலிமனை என்றால் இல்லை, வாழை, தென்னை உள்ள விவசாய நிலம் ஆகும். விவசாய நிலத்திற்கு சிட்டா, அடங்கல் கொடுக்கப்படுவது உண்டு என்றால் சரிதான். விவசாய நிலத்திற்கு வீட்டு வரி ரசீது கொடுக்கப்படுவது இல்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தில் தென்னை, வாழை உள்ளதற்கு சிட்டா, அடங்கல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.15 அடங்கல் கணக்கில் கைப்பற்றுதாரர் மற்றும் அனுபவதாரர் காலத்தில் புல எண்.180/4–ல் யார் பெயர் உள்ளது என்றால் துரைசாமி பெயர் உள்ளது.

3) வா.சா.ஆ.16, வா.சா.ஆ.17,–ல் அடங்கல் கணக்கில் கைப்பற்றுதாரர் மற்றும் அனுபவதாரர் காலத்தில் புல எண்.180/4–ல் யார் பெயர் உள்ளது என்றால் ராஜேந்திரன் பெயர் உள்ளது. வழக்கு சொத்தின் பட்டா எண் என்ன என்றால் 523 ஆகும். நான் தாக்கல் செய்துள்ள அடங்கல் கணக்குகளில் தென்னை மரம் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தின் வடக்கில் எனது வீடு உள்ளது என்றால் ஆமாம். எனது பூர்வீக வீடு வடக்கு தெருவில் உள்ளதா என்றால் 1968–க்கு முன்பு இருந்தது தற்போது இல்லை. பூர்வீக வீட்டின் சர்வே எண் என்ன என்றால் சர்வே எண்.210C 325/54, 55 ஆகும்.

பூர்வீக சொத்தை 2023-ல் எங்களது பங்காளிகளிடமிருந்து கிரையம் பெற்று மகனுக்கு வீடு கட்டியுள்ளேன்.

4) தாவா சொத்திற்கு வடக்கே எனக்கு பாத்தியப்பட்ட சொத்தை எப்போது வாங்கினேன் என்றால் 1997-ல் வாங்கினேன். அந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரை உள்ளது வீட்டு வரி ரசீது என்றால் ஆமாம். மேற்படி 4 ஆவணங்களில் எனது பெயர் இல்லை என்றால் சரிதான், எனது அக்கா பெயரில் உள்ளது. எனது அக்காவை திருமணம் செய்து கொடுத்தது உள்ளூரிலா என்றால் இல்லை, அவருக்கு திருமணம் ஆகவில்லை. எனது ஊரில் பிடாரியம்மன் கோவில் தெரு உள்ளது என்றால் ஆமாம், அங்கு எனது சகோதரி சரஸ்வதி குடியிருக்கிறாரா என்றால் இல்லை, எனது 2 வது சகோதரி வாசுகி குடியிருக்கிறார்.

5) வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் வழக்கு சொத்திற்குரியது அல்ல என்றாலும், எனது பூர்வீக சொத்திற்குரியது என்றாலும் சரியல்ல, வழக்கு சொத்தில் வீடு இருந்தது என்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, வீட்டு வரி ரசீது தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்தில் 1995 முதல் வீடு இல்லை என்பது எனது கட்சியாகும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.6 வீட்டு வரி ரசீது என்றால் சரிதான். அவை இரண்டும் 2014, 2015 ஆண்டிற்குரியது என்றால் சரிதான். அவை இரண்டும் தாவா சொத்திற்கு வடக்கில் உள்ள வீட்டிற்குரியது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு வடக்கிலுள்ள சொத்தை நான் இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

6) பிரதிவாதிகளுக்கு பூர்வீகம் திருப்பூந்துருத்தி என்றால் சரிதான். வழக்கு சொத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல, நான் எனது வழக்குரையில் பட்டா பிரதிவாதி பெயரில் உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் பட்டா மோசடியாக பெறப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளேன். பிரதிவாதிகள் பட்டாவை மோசடியாக பெற்றுள்ளார்கள் அதை ரத்து செய்ய வேண்டும் என்று மனு கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்திற்கான பட்டா தங்கவேல் பெயரிலும், பிரதிவாதிகள் பெயரிலும் கூட்டாக உள்ளது என்றால் சரிதான். தங்கவேல் என்பது பிரதிவாதிகளின் பங்காளி என்றால் சரிதான்.

7) பிரதிவாதிகளுக்கு வீடு எங்குள்ளது என்றால் காசிவிஸ்வநாதர் கோவில் தெருவில் உள்ளது. வழக்கு சொத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட தோப்பு என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் தேக்கு மரம் இருந்ததா என்றால் இல்லை. பிரதிவாதிகள் தேக்குமரத்தை வெட்டிவிட்டதாக வா.சா.ஆ.14–ல் குறிப்பிட்டுள்ளேன் அந்த தேக்கு மரத்திற்கும், வழக்கு சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. தேக்கு மரம் உள்ள சொத்தின் சர்வே எண் என்ன என்றால் சர்வே எண்.147/10 ஆகும். அந்த சர்வே எண் 147/10–ஐ வழக்கு சொத்துவிவரத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வழக்குரையிலுள்ள பத்திகள் 5 மற்றும் 6 வழக்கின் பரிகாரத்திற்கு முற்றிலும் தொடர்பற்றது என்றால் சரியல்ல. இந்நீதிமன்றத்தில் இந்த வழக்கு தவிர வேறுவழக்குகள் இருந்தது என்றால் 2011–ல் ஒரு வழக்கு இருந்தது.

8) தாவா சொத்தில் சரஸ்வதி மண்வீடு கட்டி குடியிருந்ததாக நான் குறிப்பிட்டுள்ளது பொய் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து என்பது பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றாலும், வழக்கு சொத்தை நானோ, சரஸ்வதியோ எந்த காலத்திலும் அனுபவம் செய்ததில்லை என்றாலும் சரியல்ல. எனது எந்த வருடம் திருமணம் ஆனது என்றால் 1995–ல் திருமணம் ஆனது. எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் திருமணத்திற்கு பிறகு தனிக்குடித்தனம் சென்றதாக குறிப்பிட்டுள்ளது வழக்கு சொத்திற்கு வடக்கிலுள்ள வீட்டிற்கு சென்றதைதான் குறிக்கிறது என்றால் சரிதான். அதன்பிறகு வழக்கு சொத்தில் எனது தகப்பனாரும் சகோதரி சரஸ்வதியும் குடியிருந்ததாக கட்சி செய்கிறேன் என்றால் சரிதான்.

9) வழக்கு சொத்தின் முகவரி குறிப்பிட்டு எனது சகோதரி சரஸ்வதிக்கு குடும்ப அட்டையோ ஆதார் அட்டையோ, வாக்காளர் அட்டையோ வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு ஆவணம் உள்ளதை காட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது அப்பா எப்போது இறந்துபோனார் என்றால் 1997–ல் இறந்துபோனார் அவருக்கு இறப்பு சான்றிதழ் உள்ளதா என்றால் இல்லை. அவருக்க இறப்பு சான்றிதழ் உள்ளது என்றாலும், அந்த இறப்பு சான்றிதழில் பூர்வீக முகவரி குறிப்பிட்டுள்ளது தெரியவந்துவிடும் என்பதால்தான் அதை வேண்டுமென்றே வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

10) தாவா சொத்தை நானோ எனது குடும்பத்தினரோ எந்த காலத்திலும் அனுபவம் செய்ததில்லை என்றாலும், வழக்கில் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு

கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. தாவா சொத்திற்கு வடக்கே எனக்கு சொந்தமாக உள்ள சொத்தை சாதகமாக பயன்படுத்திக் கொண்டு தவறான தகவலை தெரிவித்து தாவா சொத்தை கைபற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

S.d/ Ramalingam

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.02.11 19:29:59 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU